# DEPOSITION OF WITNESS
(In the Court of the Principal District Munsif, Sankarankovil
O.S. No. 237/2014

| | |
|---|---|
| Deposition of Witness for | : Dw 1 |
| Name | : கிருஷ்ணசாமி |
| Father`s Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 09.02.2023 |

Solemnly affirmed in accordance with provision of act 1969 (44 of 1969) on the day of 9th February 2023.

<u>முதல் விசாரணை</u>

நான் வழக்கின் 3ம் பிரதிவாதி. நான் இன்று இந்த வழக்கில் எனக்காகவும், இதர பிரதிவாதிகளுக்காகவும் சேர்த்து எனது சத்தியபிரமாணம் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். மேற்படி வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் நான் கையொப்பம் செய்திருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை எனது தரப்பு முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள பிரார்த்திக்கிறேன்.

11.12.2008 தேதியில் 1ம் பிரதிவாதிக்கு முத்துபாண்டி வகையறா எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன். அது **பி.வா.சா.ஆ.1**

29.05.2009 தேதியில் 1ம் பிரதிவாதிக்கு முத்துபாண்டி வகையறா எழுதிக்கொடுத்த சீர்திருத்த ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன். அது **பி.வா.சா.ஆ.2**

27.011.2008 தேதியில் முத்துபாண்டி வகையறா 2,3 <u>பிரதிவாதிகளுக்கு</u> எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன். அது **பி.வா.சா.ஆ.3**

19.01.2011 தேதியில் சங்கரன்கோவில் வட்டாட்சியர் வழங்கிய பட்டா கணிணி நகல் தாக்கல் செய்கிறேன். அது **பி.வா.சா.ஆ.4**

**பி.வா.சா.ஆ.1 முதல் 4 வாதி தரப்பு ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியிடு செய்யப்படுகிறது.**

நான் தாக்கல் செய்துள்ள மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு வழக்கை தள்ளுபடி செய்யவேண்டுமென பிராத்திக்கிறேன்.